# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.368/2018

## அ.சா.13 (LW – 24 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சங்கர் | **தொழில்** | |
| **த/க பெயர்** | ராஜேந்திரன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **11.08.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 4வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டத்தில் துப்பறியும் நாய் மோப்ப நாய் படை பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 18 ஆண்டுகளாக அந்த பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.06.2018 அன்று அம்மையநாயக்கனூர் காவல்நிலைய குற்ற எண். 173/2018 இதச பிரிவுகள் 302 இதச வழக்கில் அம்மையநாயக்கனூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட சம்பவ இடமான திண்டுக்கல் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் பொட்டிக்குளம் பிரிவு கன்னிமார் நகர் பிரிவு இடையில் இடது புறம் மோகன்ராஜ் வயது சுமார் 25, த/பெ. பால்ராஜ் என்ற ஆண்பிரேதம் கிடந்த இடத்தில் இருந்த இரத்தக்கறையை மோப்ப நாய் ரூபியை கொண்டு மோப்பம் பிடிக்க செய்தததில் மோப்ப நாய் மோப்பம் பிடித்து சம்பவ இடத்திலிருந்து திண்டுக்கல் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் 100 மீட்டர் தூரம் ஓடி

இடது புறம் திரும்பி கன்னிமார் நகர் பிரிவில் திரும்பி சுமார் 1 கிமீ தூரம் ஓடி கன்னிமார் நகரை கடந்து அங்குள்ள சப்தகன்னிமார் கோவில் வளாகத்தினுள்ளே மோப்பம் பிடித்து நின்று விட்டது என்பதை தனி அறிக்கையாக ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை குவிமுச 231 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.08.12 16:24:19 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.